அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

244—

புதிய பணிமனை

***28384 திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, பெரிய ஊர்ச்சேரியில் புதிய பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் புதிய பணிமனையை அமைக்க கூட்டுறவு ஆலைக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் பணிமனை அமைக்க வேண்டாம் என்று கரும்பு விவசாயிகள் தெரிவித்ததால், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலம் தேர்வு செய்யப்பட்டு, பணிமனை அமைக்க நிலமாற்றப் பிரேரணைகள் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பொதுப் பணித் துறையின் தடையில்லா சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில மாற்றம் செய்யப்பட்ட பின்னர், அலங்காநல்லூரில் பெரிய ஊர்ச்சேரியில் பணிமனை அமைக்க நடவடிக்கை

2014 ஜூலை 24]

எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உயிரே போகும் நிலை வந்தாலும் தைரியத்தைக் கைவிடாதே; நீ சாதிக்கப் பிறந்தவன், துணிந்து நில், எதையும் வெல்' என்று சுவாமி விவேகானந்தர் சொன்னார். அதுபோன்று இந்திய வரலாற்றில் சிந்தனை ரோஜாக்கள் மலரும் நந்தவனமே, தேவைகளைத் தேர்ந்தெடுக்கும் திறன் கொண்டிருக்கையில் இரவல் உபதேசங்கள் எதற்காக? இந்தியத் திருநாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி பெற்று, மக்கள் பணி, மக்கள் நலன், ஏழையெளியோருடைய ஏற்றம், மாணவ மாணவிகள் எதிர்கால வளர்ச்சி பற்றி உணர்ந்து, பசியறிந்து உணவளிக்கும் தாயைப் போல் கடைக்கோடி குக்கிராம மக்களின் குறைகளைக் கேட்டு, அவற்றை உடனே நிறைவேற்றித் தரும் அம்மா திட்டம் தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மலர்ப் பாதம் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாவிடமருதூர், உட்கடை 15—B மேட்டுப்பட்டியில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் சர்வே எண் 60/4—ல் 2 ஏக்கர் 51 சென்ட் நிலம் உள்ளது. அந்த இடம் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்குத் தகுதியான இடம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், போக்குவரத்துத் துறை அதிகாரிகளும் நேரடியாக வந்து ஆய்வு செய்துள்ளார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் என்பதால் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சரிடமும் மனு கொடுத்துள்ளேன். அதனால் பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு கண்டு, இடப் பரிமாற்றம் செய்து அந்த இடத்தில் பணிமனை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2014 ஜூலை 24

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியர் மூலமாக பொதுப் பணித் துறையின் தடையில்லா சான்று பெற கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. விரைவாக நடவடிக்கை எடுத்து, அந்த நிலத்தைப் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அங்கே பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த பகுதியாகும். 15–B மேட்டுப்பட்டியில் பணிமனை அமைக்கும்பட்சத்தில் மேலூர் பகுதிக்கும் சாலைப் போக்குவரத்து நன்றாக இருக்கும் என்பதைக் கூறி, அந்த அலங்காநல்லூர் பகுதியில் நல்ல முறையில் செயல்படக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் இருக்கின்ற காரணத்தால், அந்த இடத்தைத் தவிர வேறு இடம் இல்லை என்பதை மீண்டும் தங்கள் மூலமாக வலியுறுத்தி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவாக பணிமனை அமைக்கவேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, மிக விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு அந்தப் பணிமனையை அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2014 ஜூலை 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துத் துறை இதுவரை கண்டிராத மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த மூன்றாண்டு கால வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளை நேற்று சட்டமன்ற உறுப்பினர்களுடைய கேள்விகளுக்கு பதிலளித்ததோடு, புதிய அறிவிப்புகளையும் வெளியிட்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இதுவரை தமிழக அரசியல் வரலாற்றில் வேறு எந்த மானியக் கோரிக்கையிலும் தந்திராத புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஒளி, ஒலி தொகுப்புக் காட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தந்து, நாட்டு மக்களுக்கு இந்தத் துறை செய்திருக்கிற சாதனைகளை புதுமையான ஒரு வடிவத்தில் தந்திருப்பதற்காக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் ஒட்டுமொத்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேலூரிலிருந்து ஈரோட்டுக்குச் செல்லும் பேருந்து காவேரி ஆற்றில் சோழசிராமணி அருகே புதியதாக கட்டப்பட்டிருக்கிற பாலத்தின் வழியாக இயக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அங்கு பேருந்துகள் இயக்குவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்*

வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் பணிமனையில் தரைத்தளம் முற்றிலும் சேதமடைந்து, அங்கு வருகின்ற பேருந்துகளைக்கூட நிறுத்தமுடியாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அதை மேம்படுத்தி சீராக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பணிமனை மேம்பாடுகளுக்கும், தொழிலாளர்களின் ஓய்வறை மேம்பாடுகளுக்கும் என 16 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கி அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்கின்ற பணிமனையைச் சீரமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை வழங்குவதற்கு அவர் ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

245—

நவீனமயமாக்குதல்

***41083—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—